உ
சிவமயம்

# சிவபூமி

மாதாந்த செய்திப் பத்திரிகை
Monthly Journal of Sivapoomi

சிவம்~06 | விசுவாசுவ வருடம் ஆடித் திங்கள் ஆடி ~2025 | பூமி~07




## மாவிட்டபுரம் கந்தப் பெருமானின் புதிய சப்பறத்தின் எழில் கொஞ்சும் திருக்காட்சி

# வடக்கு மாகாண கல்வித் துறையில் ஏற்பட்ட வீழ்ச்சியும் அதற்கான காரணங்களும்

சமீபத்தில் வெளிவந்த க.பொ.த சாதாரண தர பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் வடக்கு மாகாணம் ஒன்பதாவது நிலையில் இருப்பது மிகுந்த கவலையை தருகிறது. இப் பிரச்சனை தொடர்பாக பல்வேறு அபிப்பிராயங்கள் பேசப்படுகிறது. இணையத் தளங்களிலும், ஊடகங்களிலும், வெளிநாடுகளில் வசிப்பவர்களும் தமது கருத்துக்களை பகிர்ந்து கொண்டிருக்கிறார்கள். பொதுவாக வடக்கினுடைய கல்வி வீழ்ச்சி என்பது கடந்த சில வருடங்களாக பேசப்பட்டு வந்தாலும் இந்த ஆண்டு பகிரங்கமாக மிகவும் பின் தள்ளப்பட்டதாக மாகாணமாக வடக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. வடக்கில் சகல பாடசாலைகளும் சிறப்பாக அலங்காரமாக காட்சியளிக்கிறது. புலம்பெயர்ந்து போன பழைய மாணவர்கள் மற்றும் ஊர் விசுவாசிகளால் பாடசாலைகளுக்கு போதியளவு உதவி கிடைக்கிறது. பாடசாலைகளில் பட்டதாரி ஆசிரியர்கள் நிரம்பி வழிகிறார்கள். ஏன் இந்த சூழ்நிலை என்ற கேள்வி எழுகின்ற போது பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன.

யாழ்ப்பாணத்தில் கல்வி ஆர்வம் குன்றிவிட்டது என்று சொல்ல முடியாது. ஊர் தோறும் தனியார் வகுப்புகளில் பிள்ளைகளை இணைத்து விட்டு வீதியோரங்களில் மோட்டார் சைக்கிள்களில் தாய்மார்களும் தந்தைமார்களும் குவிந்து போய் நிற்கிறார்கள். பாடசாலை கல்வி மட்டும் அல்ல தனியார் கல்வி இரவு வரை நடைபெறுகின்றது. எனினும் பெறுபேறுகள் இந்நிலையில் இருப்பதற்கு யாரை குற்றம் சாட்டப் போகிறீர்கள். இது ஒரு மிக முக்கியமான கேள்வி. திணைக்களம் சிறந்த பெறுபேறுகள் பெற்ற பாடசாலைகளை கௌரவப்படுத்துவது வழக்கம். சிறந்த பெறுபேறுகள் பெறாத பாடசாலைகளை சுட்டிக்காட்டி அங்கு குறைபாடு இருப்பதாக சொல்லுவார்கள். ஆனால் அக் குறைபாடுகளை பூர்த்தி செய்ததாக காண முடியவில்லை.

வடக்கு மாகாணத்தில் சமய விழாக்களுக்கு கூட இடம் கொடுக்காது பாடசாலைகள் இயங்கின. நவராத்திரி காலங்களில் கூட தவணை பரீட்சைகள் நடைபெற்றன. ஆடி அமாவாசை தினத்தில் கூட விடுமுறை விடாமல் பாடசாலைகள் இயங்கின. ஆனால் பெறுபேறுகள் பொருத்தவரை வடக்கு மாகாணம் கீழே நிற்கின்றது என்றால் மாகாண கல்வி அமைச்சின் செயலாளர், மாகாண கல்விப் பணிப்பாளர், வலயங்களின் கல்விப் பணிப்பாளர்,

ஆசிரியர்
கலாநிதி. செஞ்சொற்செல்வர்
ஆறு. திருமுருகன்

உதவி ஆசிரியர்
திரு. ச. சந்தோஷன்

வலயங்களின் கல்வி அதிகாரிகள் இதற்கு என்ன பதில் சொல்லப் போகிறார்கள். அதிபர்களையும், ஆசிரியர்களையும் மட்டும் இந்த விடயத்தில் குற்றம் சாட்டி விட முடியாது. வீழ்ச்சி வருகின்ற போது அதற்கு பொறுப்பாக இருக்கின்ற மேல்நிலை அதிகாரிகளும் இந்த பிரச்சினைகளுக்கு பதில் சொல்ல வேண்டும். வழமையாக பாடசாலைகளையே குற்றம் சொல்லுகிறார்கள். நிர்வாகிகளை குற்றம் சாட்டுவது கிடையாது. இவ்வாறு பாடசாலைகள் ஒழுங்காக நிர்வாக படுத்த தவறின் இவ்வாறான நிலைமையே உருவாகும்.

வடமாகாணம் பின் தங்கி இருக்கின்றது என்று தொடர்ந்து குற்றம் சாட்டுவதை விட பாடசாலைகளில் இரு நேர பாடசாலைகளை உருவாக்கி க.பொ.த சாதாரண தர பரீட்சை வரை தரம் 6-11 வரை இரு நேர பாடசாலைகளாக மாற்ற வேண்டும். பிரத்தியேக வகுப்புகளுக்கு பேரளவு போவதை விடுத்து இரு நேர பாடசாலைகள் ஆகி மாணவர்களை வினைத்திறனான மாணவர்களாக மாற்றுவதற்கு திட்டமிட வேண்டும்.

மாகாண அதிகாரம் என்பது மாகாணங்கள் தாங்களாகவே மாகாணங்களின் கல்வி விருத்திக்காக செயல்திட்டங்களை உருவாக்குவதற்கு வாய்ப்புக்களை வழங்குவதாகும். மாகாணத்துக்கு கிடைத்த சுதந்திரங்களை கூட நாம் சரியாக பயன்படுத்தாது நாம் மத்திய அரசினுடைய கொள்கை திட்டங்களை எல்லா இடங்களிலும் பொருந்தாது என்று குறை கூறுவதில் பயனில்லை. இன்று எங்களுடைய கல்வி வீழ்ச்சிக்கு எங்கள் சுற்றாடல், எங்கள் சூழல், எங்கள் சமூக பிரச்சினைகளை அடிப்படையாக வைத்து நாம் தீர்வு காண வேண்டும் என்பதை மாகாணம் சார் நிர்வாகிகள் உணர வேண்டும். ஏழு ஆண்டுகளுக்கு ஒருமுறை ஆசிரியர்களை மாற்றுவது என்பது கூட சில மாகாணங்களுக்கு பொருந்தாது. கஷ்டப் பிரதேசத்தில் கடமையாற்றவில்லை என்று 50 வயது நிரம்பிய ஒரு ஆசிரியரை கிளிநொச்சி மாவட்டத்திற்கும், தீவகத்திக்கும் மாற்றுவது இரண்டு இடத்துக்குமே பாதிப்பை உண்டாக்கும்.

அவர் பணியாற்றிய முதல் பாடசாலையிலும், மாறி செல்கின்ற பாடசாலையிலும் அவரால் முழுமையாக பணியாற்ற முடியாது. முதல் நியமனத்தின் போது கஷ்டப்பிரதேசங்களுக்கு நியமித்து அவர்கள் இளம் வயதிலேயே அங்கு பணியாற்றி விட்டு பின்னர் அவர்களுடைய சொந்த இடங்களுக்கு வரலாம். அந்த முதல் நியமனத்தை உள்ளூரிலே கொடுத்துவிட்டு 50 வயது ஆகின்றபோது கஷ்டப் பிரதேசத்தை நோக்கி அனுப்பு என்பது கல்விச்சீர் அழிவுக்கே வித்திடும். வட மாகாணத்தில் இப்போது இதுதான் நடைபெறுகின்றது. தேசிய பாடசாலைகளில் ஆசிரியர்கள் ஒன்றுமில்லாதவாறு அதிகரித்து இருகிறார்கள். பகிர்ந்து அளிக்கப்படவில்லை. கிழக்கு ஒரு காலத்தில் கல்வி வளர்ச்சியில் பாதிக்கப்பட்டிருந்தது. ஆனால் இன்று கிழக்கில் கல்வி நல்ல அறுவடை பெறுகின்றது. வடக்கு மாகாணத்தில் அதிகம் 9A எடுத்த பாடசாலைகளில் நாம் வியந்து போற்றுகின்றோம்.

ஆனால் திருகோணமலை திருக்கோணேஸ்வரா வித்தியாலயத்தில் 36 பேர் 9A. அது பெரும் சாதனை. ஏனென்றால் திருகோணாமலையில் தமிழர்கள் எவ்வளவோ இன்னல்களுக்கு மத்தியில்தான் வாழ்கிறார்கள். அவர்களது முயற்சியை பாராட்ட வேண்டும். எனினும் ஒப்பிட்ட அளவில் வடக்கு மாகாணம் பின்தாங்கி தான் இருக்கிறது. பெருமளவு பாடசாலைகளில் பௌதீக வளங்களை தாராளமாக அரசு வழங்காமல் விட்டாலும், எமது தமிழ் மக்கள் வழங்குகிறார்கள். பாடசாலைகள் சகல வசதிகளுடன் உள்ளன. ஆனால் தமிழரின் கல்வி வளர்ச்சி அடைந்திருக்கிறதா என்பதே கேள்வி.

உடனடியாக தமிழ் மாணவர்களின் இந்த கல்வி வீழ்ச்சிக்கு காரணங்களை கண்டறிந்து மாற்று ஏற்பாடுகளை செய்யாது விட்டால், எமது எதிர்காலம் கேள்விக் குறியாகும். கல்விதான் எமது சமூகத்தின் மூலதனம் என்பதை மறந்து விடாமல் செயற்படுவோம்.

கலாநிதி செஞ்சொற்செல்வர்
ஆறு.திருமுருகன்

# ஆத்ம சாந்தி பிரார்த்தனை



எமது சிவபூமி குப்பிளன் ஞான ஆசிரமத்தில் நீண்ட காலமாக பணியாற்றி சிறப்பாக நிர்வகித்து வந்த திரு சோமசுந்தரம் ஸ்ரீதரன் அவர்கள் 01.07.2025 கனடாவில் காலமானார் அன்னாரின் ஆத்மா சாந்தி பெற இறைவனை பிரார்த்திக்கிறோம்.

அன்னாரின் பிரிவால் துயர் உற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

# நாவற்குழியில் “சிவபூமி திருவாசக அரங்கம் மண்டபம்” சிறப்பாக திறந்துவைக்கப்பட்டது!



யாழ்ப்பாணம் நாவற்குழியில் அமைந்துள்ள திருவாசக அரண்மனை வளாகத்தில் புதிதாக கட்டியமைக்கப்பட்ட “சிவபூமி திருவாசக அரங்கம் மண்டபம்” (14.07.2025) மாலை மகிழ்ச்சியும் ஆனந்தமும் நிறைந்த சூழலில் திறந்து வைக்கப்பட்டது.

வைத்திய கலாநிதி சண்முகநாதன் – அருந்ததி தம்பதிகளின் நினைவாக, அவுஸ்ரேலியாவில் வசிக்கும் வைத்திய நிபுணர் மனோமோகன் – சிவகௌரி தம்பதிகள் தங்களது பெருந்தாராள மனப்பான்மையுடன் இந்த அரங்கத்தை உருவாக்கி அர்ப்பணித்துள்ளனர்.

சிறப்பான இந்த நிகழ்வில், சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில், வைத்திய நிபுணர் மனோமோகன் – சிவகௌரி தம்பதிகள் இணைந்து மண்டபத்தின் திறப்பை நிகழ்த்தினர்.








வடமாகாண ஆளுநர் நா.வேதநாயகன், யாழ்ப்பாணம் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.




இந்நிகழ்வின் போது, “சிவபூமி திருவாசக அரங்கம்” திறப்பு விழா மலரும் வெளியிடப்பட்டது. சமூக, மத, கலாச்சார மேம்பாட்டிற்கு ஒரு புதிய ஒளியைப் பரப்பும் இவ்வரங்கம், இனி பல முக்கிய நிகழ்ச்சிகளுக்கு மையமாக விளங்குமென அனைவரும் வாழ்த்தினர்.



















# மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலின் பிரமாண்ட சப்பறத் திருவிழா

இலங்கையில் முதன்முதலில் பெரிய சப்பறம் கட்டும் மரபினை மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலே அறிமுகம் செய்தது. இந்நிலையில் மகோன்னதமான சுமார் 64 அடி உயரமும் 30 அடி அகலமும் 27 அடி நீளமும் கொண்ட சப்பரம் ஒன்று உருவாக்கப்பட்டு நேற்று 21.07.2025 வெள்ளோட்டம் கண்டிருக்கிறது. இன்று இரவு (22/07/2025) பெரியசப்பறத் திருவிழா இடம்பெறவுள்ளது.

தன்னுடைய முழுச் செலவில் இந்த பிரமாண்டமான சப்பை இரதத்தை செய்த உபயகாரர்களான குகனேசன் குடும்பத்தினரின்

ஆன்மீகப் பணி பாராட்டுதலுக்குரியது. தனது தந்தையார் மாவை நடராஜா (விதானையார்) வழி பெரிய தந்தையாராகிய செல்லப்பா இராசரத்தினமும் அவரது சகோதரர்களின் ஊடாக இவர்களுக்கு கிடைத்த இந்த பாரம்பரியத்தை தொடரும் இவர்கள் செயல் பாராட்டுதலுக்குரியது. மிகப் பிரமாண்டமான இந்த சப்பை இரத்தை உருவாக்கும் சிற்பாசாரியர்களின் திறமைக்கு தலை வணங்குகிறோம்.




மேலும் எல்லாவற்றிற்கும் மேலாக முருகவேள் பெருமானின் திருவருளும் குருக்கள் ஐயாவின் குருவருளும் இணைந்து இந்த அதிசயத்தை நிகழ்த்தி காட்டியுள்ளது.

வலிகாமம் இடப்பெயர்வுக்கு முன் இறுதியாக 1990ஆம் ஆண்டு இடம்பெற்ற மாவைக் கந்தனின் பெரிய சப்பறத் திருவிழாவும் (படம்- 1) புதிதாக அமைக்கப்பட்டு இன்று வெள்ளோட்டம் இடம்பெற்ற மாவைக் கந்தனின் 64 அடி உயரமான புதிய பெரிய சப்பறமும் (படம்- 2) இங்கே புகைப்படங்களாக காட்சிப்படுத்தப்படுகின்றன.

தில்லைச்சிதம்பரத்து மரபை ஒத்ததாக எம்பெருமான் அந்த சப்பரத்தில் இன்று ரிஷபத்தில் எழுந்தருளி காட்சி தர இருக்கிறான். கோபுர தரிசனம் கோடி புண்ணியம் என்பார்கள். அந்த கோபுர தரிசனம் காண முடியாத பக்தர்களைத் தேடி இறைவன் கோபுரத்தோடு திருவீதியுலா வரும் தத்துவத்தை உணர்த்துவதே சப்பறத் திருவிழா ஆகும்.

கோபுர தரிசனம் கிடைக்காதவர்களுக்கும் கோபுர தரிசனம் கிடைக்கச் செய்யும் இந்த மாபெரும் புண்ணியத்தை காண மாவிட்டபுரம் வாருங்கள்.

# சிவபூமி மனவிருத்தி பாடசாலையின் மெய்வல்லுநர் போட்டி சிறப்பாக நடைபெற்றது

கோண்டாவில் சிவபூமி மனவிருத்தி பாடசாலையின் வருடாந்த விளையாட்டு போட்டி நிகழ்வுகள் 30.06.2025 அன்று பாடசாலை மைதானத்தில் கலாநிதி.ஆறு.திருமுருகன் தலைமையில் இடம்பெற்றது. யாழ்ப்பாண பல்கலைக்கழக உடற்கல்வி போதனாசிரியர் செல்வி. இராதை அருளம்பலம் அவர்கள் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்தார்கள். கனடாவைச் சேர்ந்த திரு. கு. பரமேஸ்வரன் தம்பதிகள் மற்றும் எமது பாடசாலையின் இளைப்பாறிய அதிபர் திருமதி கலைவாணி குகதாசன் அவர்கள் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாவும் கலந்து நிகழ்வை சிறப்பித்தார்கள்.

மாணவர்கள் ஆர்வத்துடன் சிவன் இல்லம் சக்தி இல்லம் என்கின்ற இல்லங்கள் ஊடாக விளையாட்டு போட்டிகளில் பங்குபற்றினார்கள். எமது மாணவர்களே பங்குபற்றிய அணிநடை மற்றும் இடைவேளை நிகழ்வுகளும் பெரும் வரவேற்பைப் பெற்றன.









சிவன் இல்லம்


சக்தி இல்லம்













# வைத்திய நிபுணர் மனமோகன் தம்பதிகள் மற்றும் அவர்கள் சார்ந்த அமைப்பின் அடுத்த அறப்பணி



யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் மருத்துவ வசதிகளை மேம்படுத்தும் நோக்கில், அவுஸ்திரேலியாவில் இருந்து வருகை தந்த பிரபல வைத்திய நிபுணர் டாக்டர் மனோமோகன் சிவகெளரி தம்பதிகள் மற்றும் அவர்கள் சார்ந்த அவுஸ்திரேலியா அமைப்பு உயரிய கொடை செய்து கொள்ள முன்வந்துள்ளனர்.

மருத்துவ சேவையின் வளர்ச்சிக்காகவும், வடமாநில மக்களின் சுகாதாரத் தேவைகளுக்காகவும், பத்து மாடிகள் கொண்ட நவீன மருத்துவக் கட்டடம் ஒன்றை அமைத்துக்கொடுக்கவுள்ளதாக அவர்கள் அறிவித்துள்ளனர்.

சுகாதாரத் துறைக்கான இவர்களின் இந்த மகத்தான பங்களிப்பு, மருத்துவ சேவையை நாடி வரும் ஆயிரக்கணக்கான நோயாளிகளுக்கு புதிய நம்பிக்கையும், மேம்பட்ட சிகிச்சை வாய்ப்புகளையும் வழங்கும்.

யாழ்ப்பாண மக்களும், மருத்துவ சமூகம் முழுவதும் மனமார்ந்த பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் டாக்டர் மனோமோகன் – சிவகெளரி தம்பதிகளுக்கும் அவர்கள் சார்ந்த அமைப்பினருக்கும் தெரிவித்துக்கொள்கின்றனர்.

அவர்களின் உயர்ந்த உள்ளத்தால் உருவாகும் இந்த மாபெரும் மருத்துவக் கட்டிடம், யாழ்ப்பாணத்தின் சுகாதார வரலாற்றில் ஒரு பொற்குறியாக நிலைத்து நிற்கும்.

# பக்தி பூர்வமாக நடைபெற்ற திருவாசக அரண்மனையின் கும்பாபிஷேக விழா நிகழ்வுகள்




திருவாசக அரண்மனையின் பெருமைக்குரிய கும்பாபிஷேக விழா 07.07.2025 அன்று காலை 9.00 மணி முதல் மிகவும் பக்தி பூர்வமாக ஆரம்பமாகியது. இந்த நன்னாளில் பக்தர்கள் கலந்து கொண்டு இறைவன் அருளைப் பெற்று இன்புற்று இருந்தனர்.

திருவாசக அரண்மனை அமைக்கப்பட்ட நிலமும் நிதியும் அவுஸ்ரேலியாவில் வசித்து வரும், வைத்திய நிபுணர் மனோமோகன் தம்பதிகள் அளித்த பெரும் தானமாகும். இவர்கள் பூசை வழிபாடுகளில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

பூசை முடிவில், பக்தர்களுக்காக மதிய அன்னதானம் வழங்கப்பட்டது. சகல ஏற்பாடுகளும் ஒழுங்காக, பக்தி பூர்வமாக நடந்தன. திருவாசக அரண்மனை பக்தர்களின் ஆன்மிக வளர்ச்சிக்கான ஒரு ஒளி மயமான நிலையமாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.











# சிவபூமி விருட்சம் ஆரம்பிக்கப்பட்டது



(02.07.2025) சிவபூமி அறக்கட்டளை புதிதாக பயன் தருமரங்கள் மற்றும் பூங்கன்று வகைகள் மற்றும் மூலிகை மரங்கள் ஆகியவற்றை உற்பத்தி மற்றும் விற்பனை செய்து, எம் மண்ணை விட்டு அருகிவரும் அரிய வகை மரங்களை பேணிப் பாதுகாக்கும் முகமாகவும் ” சிவபூமி விருட்சம் ” என்னும் பெயருடன் அறக்கட்டளை தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்களால் ஆரம்பிக்கப்பெற்று பூசை வழிபாடுகள் இடம்பெற்றன.





# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கு உயரிய கௌரவம் கிடைத்தது




யாழ்ப்பாணம் இந்து கல்லூரி ஆசிய அளவிலான ஆரோக்கிய சூழல் நிறைந்த் பாடசாலையை தெரிவு செய்யும் போட்டியில் முதலிடம் பெற்றது. AIA Healthiest Schools Awards என்ற ஆசிய-பசிபிக் பிராந்திய போட்டியில் 8,00 க்கும் மேற்பட்ட பாடசாலைகள் பங்கு பற்றியது. அதில் யாழ்ப்பாணம் இந்து கல்லூரி, Active Lifestyle பிரிவில் முதல் இடத்தை பெற்றுள்ளது.

இந்த விருது 2025 ஜூலை 3ஆம் தேதி, வியட்நாமின் Pullman Beach Resort, டனாங்கில் நடைபெற்ற சர்வதேச விழாவில் வழங்கப்பட்டது.






# உயர் குருதியமுக்கம் நூல் வெளியீடு இடம்பெற்றது

வைத்திய நிபுணர் செல்லத்துரை பிரசாத் அவர்கள் எழுதிய உயர் குருதியமுக்கம் நூல் வெளியீட்டுவிழா. பருத்தித்துறையில் 29.06.2025 அன்று நடைபெற்றது. சாதாரண மக்களும் வாசித்து பயன் பெறும் வகையில் இந்த நூல் ஆக்கப்பட்டுள்ளது.





# வரலாற்றுச் சாதனை படைத்த கோணேஸ்வரா இந்துவின் மைந்தர்கள்

தி/இ.கி.ச ஸ்ரீ கோணஸ்வரா இந்துக்கல்லூரியின் வரலாற்றில் முதல் தடவையாக 35 மாணவர்கள் 9A சித்திகளை பெற்று சாதனை படைத்துள்ளார்கள். அவர்களுக்கான கௌரவிப்பு கல்லூரியின் காலைக்கூட்டத்தில் இடம் பெற்றது.



# நிலமும் அரங்கமும் தந்த வள்ளல்கள்



**வைத்திய நிபுணர் வைரமுத்து மனோமோகன்**
**வைத்திய கலாநிதி சிவகௌரி மனோமோகன்**
**தம்பதிகள்**
Mr. & Mrs.
Dr Vairamuttu Manamohan [Cardiologist (Heart Specialist)]
&
Dr. Shivagowri Manomohan

அமரர் வைத்திய கலாநிதி தம்பிராசா சண்முகநாதன் மற்றும் துணைவியார் அமரர் அருந்ததி சண்முகநாதன் நினைவாக, அன்னாரின் குடும்பத்தின் சார்பில் வைத்திய நிபுணர் வைரமுத்து மருமகன் அவர்களும், இவரது பாரியார் வைத்திய கலாநிதி சிவகௌரி மனோமோகன் அவர்களும் சிவபூமி திருவாசக அரங்கு அமைந்துள்ள இந்த நிலத்தை அன்பளிப்பாக வழங்கியதோடு கட்டிடம் அமைப்பதற்கான முழுச் செலவையும் பொறுப்பேற்று இப்பாரிய திருப்பணியை நிறைவேற்றியுள்ளார்கள்

## அமரர் வைத்திய கலாநிதி த. சண்முகநாதன் அவர்களைப் பற்றிய குறிப்புகள்



யாழ்ப்பாணம் கொழும்புத்துறையை சேர்ந்த திரு. திருமதி தம்பிராசா அமிர்தவள்ளி தம்பதிகளின் புதல்வர் வைத்திய கலாநிதி சண்முகநாதன் அவர்கள். இவர் 1921 பெப்ரவரி 4ஆம் திகதி அன்று பிறந்தார். யாழ் சென். ஜோன்ஸ் கல்லூரியிலும், தொடர்ந்து சென். பற்றிக்ஸ் கல்லூரியிலும் கல்வி கற்றார். பின்னர் கொழும்பு பல்கலைக்கழக மருத்துவ கல்லூரியில் இணைந்து தனது பட்டப்படிப்பை மேற்கொண்டார். வைத்திய கலாநிதி சண்முகநாதன் அவர்கள் ஆரம்பத்தில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை, புத்தளம் மாவட்ட வைத்தியசாலை, எட்டியாந்தோட்டை மாவட்ட வைத்தியசாலை என்பவற்றில் பணி புரிந்துள்ளார்.

பின்னர் கனடாவில் உள்ள டொரன்டோ பல்கலைக்கழகத்தில் தோலியல் மருத்துவத்துறையில் பட்டப்பின் படிப்பை மேற்கொண்டார். தொடர்ந்து கண்டி பொது வைத்தியசாலையில் தோலியல் மருத்துவர் ஆலோசக நிபுணராகவும், இரத்தினபுரி வைத்தியசாலையில் தோலியல் மருத்துவ நிபுணராகவும், பின்னர் அதே வைத்தியசாலையிலும், தொடர்ந்து யாழ் போதனா வைத்திய சாலையிலும் வைத்திய அத்தியட்சகராகவும் பணியாற்றி இருக்கிறார். இதன் பின் மட்டக்களப்பு, வவுனியா ஆகிய இடங்களில் சுகாதார சேவைகள் அத்தியட்சகராகவும் கடமையாற்றி ஓய்வு பெற்றார். 1988 ஆம் ஆண்டு அமெரிக்கா சென்று வசித்து வந்தார். இவர் 2011 ஆம் ஆண்டு நவம்பர் 4ஆம் திகதி அன்று காலமானார்.

வைத்திய கலாநிதி சண்முகநாதன் அவர்கள், முன்னர் யாழ்ப்பாணத்தில் பிரபல்யம் பெற்று விளங்கிய வைத்திய நிபுணர்களான எஸ்.ஏ.வெற்றிவேலு, எஸ்.ஏ.தர்மலிங்கம் ஆகியோரின் மருமகன் (சகோதரியின் புதல்வர்) ஆவார். திருவாசக அரண்மனை அமைந்துள்ள நிலத்தை அன்பளிப்பாக வழங்கியிருக்கும் வைத்திய நிபுணர் மனோமோகன் அவர்களது பாரியார் வைத்திய கலாநிதி சிவகௌரி அவர்கள் வைத்திய கலாநிதி சண்முகநாதன் அவர்களது புதல்வி என்பது குறிப்பிடத்தக்கது.

# ஆபத்தில் ஆசாரம் பார்த்தால் ஆண்டவனே சிரிப்பான்



உத்தங்க-மகரிஷி அந்த வனாந்திரமான பிரதேசத்தில் கால் கடுக்க நடந்து கொண்டிருந்தார். தாகம் அவரை வாட்டி வதைத்தது.

“என்ன தாகம் இது! உயிரே போய்விடும்போல் அல்லவா இருக்கிறது?” என்று தவித்தார்.

கண்ணன் அவரைச் சோதிக்கிறானா? ஆம். உண்மையிலேயே அதுதானே நடக்கிறது! முனிவர் அல்லவா அவர் எப்போதாவது யாரேனும் முனிவர்கள் அடியவர்கள் உபசரித்தால் கனிகள், பசும்பால் மட்டும் சாப்பிடுவதுண்டு மற்றபடி காற்றும் நீருமே ஆகாரம். இன்றென்ன இப்படி ஒரு தாகம்! அங்கே ஒரு பொய்கை கூடத் தென்படவில்லை.

உத்தங்கர் தாகத்தின் கொடுமை பொறுக்காமல் காலோய்ந்து உட்கார்ந்து விட்டார்

“கண்ணா! என் உணர்வுகளை எல்லாம் வென்று விட்டதாக மமதை கொண்டேன். இந்தப் பாழும் தாக உணர்வை வெல்ல முடியவில்லையப்பா! பிராணனே போய்விடும் போல் இருக்கிறதே? கிருஷ்ணா-எங்கிருந்தாவது எனக்கு ஒரு குவளை நீர் கிடைக்க நீ அருளக்கூடாதா? வாய்விட்டுக் கதறியும் கூட அந்தக் கதறல் ஏன் அவன் செவியை எட்டவில்லை? அஸ்தினாபுரத்தில் பாஞ்சாலியின் கதறல் கேட்டு துவாரகையிலிருந்து சேலை வழங்கியவன், இன்று என் கதறலைக் கேட்டு ஒரு குவளை தண்ணீர் தருவதில் என்ன சிரமம்? கண்ணனின் கருணைக் கடல் வற்றிவிட்டதா?” என்று புலம்பினார்.

பாஞ்சாலியைப் பற்றி நினைத்ததும் உத்தங்கருக்கு பாரதப் போரின் போது கண்ணன் அவருக்கு வழங்கிய ஒரு வாக்குறுதி ஞாபகத்தில் வந்தது.

“அதன்படி இப்போது கண்ணன் எனக்கு தண்ணீர் தந்ததாக வேண்டுமே? பரம்பொருள் வாக்குதவறுமாஎன்ன?” உத்தங்கர் திகைத்தார்.

அவர் மனத்தில் பழைய நினைவுகள் படம் படமாய் விரிந்தன. பாரதப் போர் முடிந்து கண்ணன் துவாரகை திரும்பும் வழியில் உத்தங்க மகரிஷி கண்ணனைக் கண்டார். பாரதப் போர் நிலவரம் எதுவும் உத்தங்கருக்குத் தெரியாது. தவத்திலேயே ஆழ்ந்திருந்த அந்த மகரிஷி கண்ணனை வணங்கி வெகுபிரியமாய் விசாரித்தார்.

“கண்ணா! பாண்டவர்களுக்கும் கவுரவர்களுக்கும் இடையே நட்புறவை ஏற்படுத்தினாய்அல்லவா? எல்லோரும் நலம் தானே? பீஷ்மர் எப்படி இருக்கிறார்? என்று வினவினார்.

கண்ணன் பணிவோடு நடந்த அனைத்தையும் சொன்னான். ”பீஷ்மர் இறந்துவிட்டார். கவுரவர்கள் கொல்லப்பட்டார்கள் வள்ளல் கர்ணனும் கூட மாண்டு போனான். இப்போது தர்மபுத்திரரின் அரசு ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.” என்று சொல்லி முடித்தான் கண்ணன்.

இந்தச் செய்திகளை முதன் முறையாக கேட்ட உத்தங்கரின் கோபம் எல்லை மீறியது. கண்ணன் கடவுள் என்ற எண்ணத்தைக் கூட அந்தக் கோபம் பின்னுக்குத் தள்ளிவிட்டது.

“என்ன சொல்கிறாய் கண்ணா? நீ நினைத்தால் அவர்களிடையே சமாதானத்தை ஏற்படுத்தியிருக்க முடியாதா? ஏராளமான பேர் கொல்லப்படுவதில் என்ன ஆனந்தம் உனக்கு? நீ நினைத்தது தானே நடக்கும்? அவ்விதமெனில் நீ ஏன் அனைவரையும் காப்பாற்ற வேண்டும் என்று நினைக்கவில்லை? இதோ உன்னைச் சபிக்கப்போகிறேன்!”

உத்தங்கர் கமண்டலத்திலிருந்து கண்ணனுக்குச் சாபம் தருவதற்காக ஒரு பிடி தண்ணீரை கையில் எடுத்து விட்டார். கண்ணன் அந்தத் தண்ணீரைச் சடாரென்று தட்டிவிட்டான்.

தனக்குச் சாபமளிப்பதன் மூலம்அவரது தவவலிமை குறைந்து போவதைத் தான் விரும்பவில்லை என்றும் அதர்மத்தை அழித்து தர்மத்தை நிலைநாட்டுவதே தன் அவதார நோக்கமென்றும் அதைக் கருத்தில் கொண்டே செயல்பட்டதாகவும் விளக்கினான்.

மனித அவதாரத்தில் மனித சக்திக்கு உட்பட்டே செயல்பட வேண்டும் என்றும், அதை மீறித் தான் செயல்பட்டும் கூட துரியோதனனை மாற்ற இயலவில்லை என்றும் கண்ணன் கூறியதைக் கேட்டு உத்தங்கர் மனம் நெகிழ்ந்தார். உத்தங்கரைப் பாசம் பொங்கப் பார்த்த கண்ணன் அர்ச்சுனனுக்குப் போர்க்களத்தில் கீதை சொன்ன போது தான் காட்டிய விஸ்வரூப தரிசனத்தை உத்தங்கருக்கும் காட்டினான். அவர் பிரமிப்போடு விஸ்வருபத்தை தரிசித்தார். மீண்டும் பழைய வடிவம் பெற்ற கண்ணன் உத்தங்கரிடம் கனிவோடு சொன்னான்.

“ஏதேனும் ஒரு வரம் கேட்டுப் பெற்றுக் கொள்ளுங்கள் உத்தங்கரே! என்றான் கண்ணன்.”

“கண்ணா! உன் விஸ்வரூப தரிசனத்தையே பார்த்துவிட்ட பிறகு இனி வேறென்ன வேண்டும் எனக்கு? உன்னைச் சபிக்க எடுத்த என் கை நீரைத் தட்டிவிட்டாயே! அதனால் அல்லவோ என் தவம் பிழைத்தது! என் கை நீரைத் தட்டி விட்ட நீ எப்போது எங்கே எனக்கு நீர் தேவைப்பட்டாலும் அது கிடைக்க அருள்வாயாக. இந்தவரமும் கூட எனக்குத் தேவையில்லை தான் வரம் கேள் என்று பரம்பொருளே சொன்ன பிறகு அதன் கட்டளையைப் பணிவதே சரி என்பதால் இதைக் கேட்டேன்!” பதிலளித்தார் உத்தங்கர்.

கண்ணன் கலகலவென்று நகைத்தான். “அப்படியே ஆகுக!” என்று சொல்லி வாழ்த்திவிட்டு சென்றுவிட்டான்.

வனப் பிரதேசத்தில் தாகத்தால் தவித்துக் கொண்டிருந்த உத்தங்கர்.

“அன்று கண்ணன் தந்த வரம் பொய்ப்பிக்குமா? ஏன் இன்னும் தண்ணீர் கிட்டவில்லை?” என்று திகைத்தார். அப்போது தொலை தூரத்தில் ஒரு புலையன் வருவது தென்பட்டது. கையில் ஒரு குவளை நீரோடும் சுற்றிலும் நாய்களோடும் வந்து கொண்டிருந்தான்.

“சாமி எங்க இங்க வந்து மாட்டிக்கிட்டீங்க? தண்ணீர் இல்லாத காடாச்சே இது? தாகம்
வாட்டுதா? தண்ணீர் தரட்டுமா?
வாங்கிக் குடிக்கிறீங்களா? ”

கடும் தாகத்திலும் உத்தங்கரின்
ஆசாரம் அவரைத் தடுத்தது. போயும் போயும் புலையன் கையால் நீர் வாங்கி அருந்தவா?
“சீச்சி! தள்ளிப் போ!”.. அவனை விரட்டினார்

“சாமீ, தள்ளிப் போன்னு சொன்னீங்களே? எதைத் தள்ளிப் போகச் சொல்றீங்க? என் உடலையா? ஆன்மாவையா? உடலுக்கே சாதி கிடையாது என்கிறபோது, ஆன்மாவுக்கு ஆண், பெண் பால் வேற்றுமை கூடக் கிடையாதே சாமி? எல்லா உடலும் சாகப் போகிறது தானே? சாகாத உடல் இருந்தாச் சொல்லுங்க. அதை உசந்த சாதி உடல்னு நான் ஒப்புக்கிறேன்!”

உத்தங்கர் திகைத்தார்.

“ஒரு புலையன் என்ன அழகாக
வேதாந்தம் பேசுகிறான்! யார் இவன்?” என மனதிற்குள் சிந்தித்து விட்டு “யாரப்பா நீ?” திகைப்போடு கேட்டார்.

பதில் சொல்ல அவன் அங்கே இல்லை. அவனும் உடன் வந்த நாய்களும் சடாரெனக் காட்சியை விட்டு மறைந்துவிட்டன.

“கண்ணா! என் தெய்வமே!
என்ன சோதனை இது?
வந்தது யாரப்பா?”
உத்தங்கர் கதறினார்

அவரின் செவிகளில் இனிய புல்லாங்குழல் நாதம் கேட்டது. திரும்பிப் பார்த்தார். கண்ணன் குறும்பு தவறும் புன்முறுவலோடு நின்று கொண்டிருந்தான்.

“உத்தங்கரே! உமக்கு நீர் தருவதாகத்தான் வாக்குறுதி தந்தேனே தவிர யார் தருவார் என்று உத்தரவாதம் தரவில்லையே. நாய்களோடு கீழ்ச்சாதி என நீர் எண்ணும் புலையன் வடிவில் வந்தவன் யார் தெரியுமா? தேவேந்திரன் அவனிடம் உத்தங்கர் என் பக்தர்

தாகத்தால் வாடுகிறார் அவருக்கு நீரையல்ல, அமிர்தத்தையே கொண்டு கொடு என்றேன். அவன் மனிதர்களுக்கு அமிர்தம் கிடைப்பதை விரும்பவில்லை. புலைய வடிவில் செல்கிறேன் அவர் ஏற்றால் வழங்குகிறேன் என்றான். அவன் எதிர்பார்த்த படியே நீர் அவன் உருவைக் கண்டு வெறுப்படைந்தீர். அமிர்தத்தை இழந்துவிட்டீர்!"

உத்தங்கரின் விழிகளிலிருந்து கண்ணீர் வழிந்தது.

"உத்தங்கரே! கீழச்சாதியினர் என்று உங்களைப் போன்றோர் கருதும் மனிதர்களால் தானே உலகம் நடக்கிறது? உழவுத் தொழில் செய்வோர் மண்பாண்டம் செய்வோர் ஏன் கழிவை அகற்றுவோர் இவர்களெல்லாம் தொழிலை நிறுத்திவிட்டால் உலகம் என்ன ஆகும். வர்ணாஸ்ரமம் என்பது தொழில் சார்ந்த பிரிவே தவிர பிறப்பில் உயர்வு தாழ்வு இல்லை என்பதை ஏன் நீங்கள் உணரவில்லை. கீழ்ச்சாதியினர் என்று உங்களைப் போன்றோர் ஒதுக்கும் மனிதர்கள் செய்யும் தொழில் தானே அமிர்தம். அந்த அமிர்தத்தால் தானே உலகம் அழியாமல் நிலையாய் நிற்கிறது. அவர்கள் இல்லாவிட்டால் என்றோ உலகம்அழிந்திருக்குமே
ஒரு பிரிவினரை ஒதுக்கினால்

அவர்கள் மூலம் கிடைக்கும் அமிர்தத்தையே அல்லவா உலகம் இழக்க நேரிடும்?" கண்ணன் அன்புடன் கூறினான்.

உத்தங்கர் கண்களைத் துடைத்துக்கொண்டார். பக்திப் பரவசம் நிறைந்தவராய்,

"கண்ணா! நீ அர்ச்சுனனுக்குச் சொன்னது அர்ச்சுன கீதை எனக்குச் சொன்னது உத்தங்க கீதை. இந்த கீதையின் உண்மையை உலகம் உணரட்டும். பிரபோ! என் மனதில் தெளிவு பிறக்க உன் ஆசி தேவையப்பா! என்றார்."

கண்ணனின் கரம் அவருக்கு ஆசி வழங்கியது.பின் அவனது உருவம் அவர் நெஞ்சுக்குள் புகுந்து மறைந்தது.

# ஈழத்து கலைஞர்களுக்கு இதய அஞ்சலி

நடனத்துறையில் மூத்த இரண்டு ஈழத்து கலைஞர்கள் அடுத்தடுத்து ஆனி மாத்த்தில் காலமானார்கள். அமரர். திருமதி.ரங்கா விவேகனந்தன் அவர்கள்(வல்வெட்டித்துறை) மற்றும் அமரர் திருமதி. ஞானமணி செல்லையா அவர்கள் (திருநெல்வேலி) ஆகியோர் நாட்டிய துறையில் ஈழத்தில் பல்வேறு சாதனைகளை புரிந்தவர்கள்.



அமரர். மிருதங்க வித்துவான்.திரு.சண்முகரட்ணம் பிரணவநாதன் (உடுவில்) அவர்கள் ஜேர்மன் நாட்டில் இறைபதம் அடைந்தார். இசைத்துறையில் புகழ்பெற்றவராக இவர் திகழ்ந்தார்.

ஈழத்தின் கலைத்துறையின் ஒப்பற்ற இந்த மூத்த கலைஞர்களை நாம் நினைந்து வணங்குவோம்.





# இளைய ஆற்றலாளர்களுக்கு விருது வழங்கி கௌரவித்த செஞ்சொற்செல்வர் அறநிதியச் சபை





இளம் தலைமுறையின் சாதனைகளை உற்சாகப்படுத்தும் முகமாகவும், சமூகத்தின் முன்னேற்றத்தில் அவர்களின் பங்கு மற்றும் சேவைகளை மதிப்பளிக்கும் நோக்கில், செஞ்சொற்செல்வர் பிறந்தநாள் அறநிதியச் சபை வருடந்தோறும்" இளைய ஆற்றலாளர் விருது" யை வழங்கி வருகின்றது.

இவ்வருடம், இவ் விருதினை பெறுபவர்களாக சிறுநீரக சத்திரசிகிச்சை நிபுணர் டாக்டர் பாலசிங்கம் பாலகோபி மற்றும் யாழ் பல்கலைக்கழக புவியியல் துறைத் தலைவர் கலாநிதி நாகமுத்து பிரதீபராஜா ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

டாக்டர் பாலகோபி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் சத்திரசிகிச்சைத் துறையின் தலைவர் மட்டுமல்லாமல், சிரேஷ்ட விரிவுரையாளராகவும் பணியாற்றி வருகிறார்.









கலாநிதி நாகமுத்து பிரதீபராஜா, புவியியல் துறைத் தலைவராகவும், அத்துடன் சான்றளிக்கப்பட்ட வானிலை ஆய்வாளராகவும் சிறப்பாகக் கடமையாற்றி வருகிறார். இவ் விழாவில், யாழ் போதனா வைத்தியசாலையின் வைத்திய நிபுணர் டாக்டர் சிவன்சுதன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். ஏராளமான பொதுமக்கள், சமயத் தலைவர்கள், மகளிர் இல்ல மாணவிகள் மற்றும் சிவாச்சாரியார்கள் விழாவில் கலந்து கொண்டு விருது பெற்ற இளம் ஆற்றலாளர்களை வாழ்த்தினர். தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தான தலைவர் செஞ்சொற்செல்வர் அவர்கள் நிகழ்வை வழிநடத்தினார்.

விருது பெற்ற இருவருக்கும் எமது மனமார்ந்த வாழ்த்துக்கள்! அவர்கள் எதிர்காலத்தில் மேலும் உயர்ந்தோங்கி, சமூக சேவையில் தங்களை அர்ப்பணிக்க, தெல்லி நகர் அன்னை துணைநின்று அருள் செய்வாளாக வாழ்த்துகிறோம்.















# திருவாசகத் தேன்

திருவாசகம் என்ற சொற்றொடர் அழகிய மொழி என்று பொருள்படும். இந்நூல் 51 திருப்பதிகங்களுக்குமாகப் பாடல்தொகை 658 கொண்டது. திருவாசகத்திற்கு உரை தில்லைக் கூத்தப்பெருமானேயன்றி வேறு இல்லை என்பது தெளிவு. சிவஞானபோதத்தின் விளக்கமாகத் திருவாசகம் அமைந்துள்ளது திருவாசகத்தின் தெளிவாகத் திருவருட்பா எழுந்தது என்று பெரியோர் கூறுவர்

தெய்வ நினைப்பு: "தெய்வம் என்பதோர் சித்தம்" உண்டாவதற்கு எத்துணையோ தவம்செய்தவராகவேண்க வேண்டும். தெய்வமென்பதோர் சித்தம் உண்டான பிறகும் எத்தனையோ இன்னல்களுக்கு ஆளாக வேண்டியுள்ளது. இதனைத் திருவாதவூரர் போற்றித் திருவகவலில் தெளிவாகியுள்ளார். அதனை ஈண்டுக் காண்போம்

தாயின் கருப்பையில் ஒரு திங்கள் ஆனவுடன் தான்றிக்காய் அளவு கரு உருவாகிறது. அங்கு ஒன்று படாது பிளவு படுத்தலாகிய இருமை யினின்றும் முதலில் தப்ப வேண்டும். இரண்டாவது திங்களில் வேறு புழுக்கள் கருவைச் சிதைக்கும் இடர் பாட்டிலிருந்து உய்யவேண்டும். மூன்றாவது மாதத்தில் கருப்பையில் உண்டாகும் பெரும் மதநீரிலிருந்து உய்ய வேண்டும் நான்காம் மாதத்தில் கருப்பையில் சூழும் இருளிலிருந்து தப்ப வேண்டும். ஐந்தாவது திங்களில் நீர், இருள் மிகுதியினால் அழியாமல் பிழைக்க வேண்டும். ஆறாவது திங்களில் தினவு மிகுதியால் உண்டான துன்பத்திலிருந்து பிழைக்க வேண்டும். ஏழாவது திங்களில் கருப்பை தாளாமல் கீழே விழுதலினின்றும் தப்ப வேண்டும். எட்டாவது திங்களில் கருப்பையில் உண்டாகிய வளர்ச்சி நெருக்கத்திலிருந்து பிழைக்க வேண்டும்.

ஒன்பதாவது மாதத்தில் வெளிப்பட இயலாது வருந்துன்பத்திலிருந்து தப்பவேண்டும். பத்தாவது மாதத்தில் தாயுடன் சேயும் அடையும் துன்பக் கடலிலிருந்து தப்பி இவ்வுலகில் பிறக்க வேண்டியுள்ளது. இவ்வளவு துன்பத்திற்கிடையில் பிறந்த பிறகும் வளருங் காலத்தில் எத்தனையோ துன்பங்கள் ஏற்படுகின்றன. இதனை நன்கு அறிந்த சீத்தலைச் சாத்தனாரும் மணிமேகலையில் "பிறந்தார் உறுவது பெருகிய துன்பம்" என்று மொழிந்துள்ளார்.

வளருங்காலத்தில் காலைக் கடன்களைச் சரிவரக் கழிக்காமல் போனாலும் துன்பம், நண்பகலில் உண்டாகும் கடும்பசி நள்ளிரவில் உறக்கமின்மை, ஊர்ப்பயணம் செய்யுங்கால் ஏற்படும் இடையூறுகள் ஆகியவற்றிலிருந்து தப்ப வேண்டும். பிறகு மருவு பெண் மயக்கத்திலிருந்தும் மதயானை போன்ற ஆசையினின்றும் பிழைக்க வேண்டும். மேலும் கல்வி யென்னும் கடலிருந்தும், செல்வம் என்னும் துன்பத்திலிருந்தும், வறுமையென்னும் நஞ்சினின்றும், பல்வகையான முயற்சிகளிலிருந்தும் தப்பவேண்டும். இவ்வாறு பிறப்பதற்கு முன்னும் பிறந்த பின்னும் அடையும் இன்னல்களுக்கோர் அளவே இல்லை.

இவ்வளவு துன்பங்களுக்குப் பிறகு கடவுள் ஒருவன் உளன் என்னும் நினைவு ஏற்படுகின்றது. உடனே ஆறுகோடி என்று கணக்கிட்டுக் கூறப்படும் மயக்கம் தரவல்ல கடவுலக ஆற்றல்கள் பல்வகைச் சூழ்ச்சிகளைக் காட்டத் தொடங்குகின்றன. நண்பர்களும் பிறரும் இறைவனை நாடாமைக்குக் காரணமாக நாத்திகம் பேசி நாத்தழும்பு ஏற்றுகின்றனர். சுற்றம் என்னும் ஆன் மக்கூட்டங்கள் பிடித்துக் கொண்டு கூவிப் பதைபதைக்கின்றன. வேதியர்கள் வேதத்தையே காட்டலாயினர். பல்வகைச் சமையத்தினரும் அவரவர் மதங்களில் காணும் முடிபே முடிபு என முழங்கினர்.

மாயாவாதம் என்னும் மதத்தினர் காற்றென வீசி மூழங்கினர். உலகாயதமென்னும் பாம்பு நஞ்சைக் கக்கிற்று. அதில் எத்தனையோ பெருஞ்சூழ்ச்சிகள் எழுந்தன. அவற்றால் நெறிதவறாமல் கொண்ட கொள்கையிலிருந்து ஒரு சிறிதும் வழுவாமல் நின்றார் வான்கலந்த மாணிக்கவாசகராம் திருவாதவூரர், அவர் நெருப்பிலிட்ட மெழுகு போல உள்ளம் உருகினார். குறை யுணர்ந்து அழுதார, நடுக்குற்றார்,ஆனந்தக் கூத்தாடினார். ஓலமிட்டார, பாடல்களினால் வாழ்த்தினார் உடலால் வணங்கினார் கொண்டது விடாஇடுக்கியும் பேதையும் போலத் தாம் பிடித்ததை நெகிழவிடாமல் இருந்தார்.

இடையறா இறையன்பில் பசிய மரத்தில் அறைந்த ஆணிபோல் உறுதியாய்ப் பற்றி நின்றார். உருக்கம் மிகுந்தார். கடல் அலைபோல் மனம் வாடினார் உடல் நடுக்குற்றார். உலகத்தினர் பேயெனக்கூறி எள்ளி நகைத்தனர். நாணம் தவிர்ந்தார். நாட்டவர் பழிச்சொற்களை நகை யெனப் பூண்டார். அவற்றால் இறையன்பு மேலிடப்பெற்றார். வீடுபேற்றினை மேலான வியப்பாக எண்ணினார்.ஈன்றணிமையுடைய பசுவானது கன்றினைத் காணாதபோது கதறிப் பதைப்பதுபோல் கதறி நடுங்கினார். பிறதெய்வங்களைக் கனவிலுங்கருதிலர்.

இறைவனது அறிவு செயல் களின் வசம் தமது அறிவு செயல் களை ஒப்பித்துச் சலியாது நிழல் போல நீக்கமற நின்றார். எலும்பு மெலிவுற்று உருகினார். மிகக்கனிவுற்று இரங்கினார் இறையன்புவெள்ளம் நிறைந்து இருகரையும் புரண்டோட ஐம்பொறியறிவுகளை அடக்கினார். ஒருமையுறப் பெற்றார் தலை வனே என்று கூவியழைத்தார். வாயகுழறினார். மயிர்ப்புளகங் கொண்டார். கைம்மலர் குவிந்தார். அகத்தாமரையாகிய நெஞ்சம் விரியப்பெற்றார். கண்கள் மகிழ்ச்சி மிகுதியால் சிறிய நீர்த்துளிகளைத் தோற்றுவித்தன நிலை தளராப் பேரன்பினை நாள்தோறும் வளர்ப்பவர்களுடைய ஒப்பற்றதாயகி அவர்களைக் காப்பாற்றும் இறைவனை வணங்கினார்.

இறைவனை வணங்குவது எவ்வாறு?

உடம்பு தானே மயிர்க்கூச்செறிந்து ஒழிய வேண்டும். இறைவனுக்கு நடு நடுங்க வேண்டும். கைகள் தாமே வணக்கம் செலுத்தும் ஒழுக்கத்தில் தலைமேல் கூப்பப்பெற வேண்டும். மனம் ஆர்வத் உலகம் உய்யும் பொருட்டு எடுத்துதால் வெப்பம் உடைத்தாக வேண்டும். நிலையற்ற பொருட்களில் ஏற்படும் பற்றுத்தானே நீங்கி ஒழிய வேண்டும். இறைவனுக்கு வணக்கம் செலுத்தும் ஒழுக்கத்தில் நழுவாதிருக்க வேண்டும் என திருவாத ஊரர் தாம் வழிபட்ட முறையை உலகம் உய்யும் பொருட்டு எடுத்து மொழித்தார் அதனை ஈண்டு காண்போம்.

நழுவாதிருக்க வேண்டும் எனத் திருகண்களிலிருந்து இன்பவெள்ளம் வாதவூரர் தாம் வழிபட்ட முறையை நிரப்ப வேண்டும். மனம் ஆர்வத் உலகம் உய்யும் பொருட்டு எடுத்துதால் வெப்பம் உடைத்தாக வேண்டும்.

“மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்து உன்விரையார் கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி வெதும்பியுள்ளம்
பொய்தான் தவிர்த்துன்னைப் போற்றி சயசய போற்றி யென்னும்
கைதான் நெகிழ விடேன் உடையாய் என்னைக் கண்டுகொள்ளே.”

என்னும் கட்டளைக் கலித்துறைப் பாடல் இறைவணக்க முறையைத் தெளிவாக அறிவிப்பதை அறிவோமாக

இறைவன் எழுந்தருளிய தன்மை:

வான், மண், வளி, ஒளி, ஊன், உயிர், உண்மை, இன்மை, கோன் என அவரவரைக் கூத்தாட்டுவனாகி நின்ற உன்னை யான் என்ன என்று சொல்லி வாழ்த்துவன் என்று வாழ்த் தம் வகையறியாது நின்ற வாதவூரரை இறைவனே எளிமையாக வந்து ஆட்கொண்டார் என்பதை அவர்வாக்கே நமக்கு மெய்ப்பித்துக் காட்டுவனவாயுள்ளன. கல்லை மென்கனியாக்கும் விச்சைகொண்டு என்னை நின்கழற் கன்பனாக்கினாய்” “மேலை வானவரும் அறியாதோர் - கோலமே எனை ஆட்கொண்ட கூத்தனே” பிறவியென்னுமிக் கடலை நீந்தத் தன்பேரருள் தந்தருளினான்.” என்னுடைய பந்த மறுத்தென்னையாண்டு கொண்ட பாண்டிப்பிரான்,” “தாயிற் பெரிதுந் தயாவுடையதம் பெருமான் மாயப் பிறப்பறுத்து ஆண்டான்” “கல்நார் உரித்து என்னை ஆண்டுகொண்டான்” என இவ்வாறு நூன் முழுவதும் இறைவன் தம்மை ஆட்கொண்ட தன்மையை விளக்கிப் போந்துள்ளார். திருத்தென்ளேணம், அற்புதப்பத்து ஆகிய பகுதிகளில் தெளிவாகக் கற்றறியலாம்.

திருச்சதகத்தில் ஒன்று காண்போம்:

உடம்பு எடாத தனிநிலையிலே கிடந்த மாணிக்கவாசகர் பிறவி யென்னும் பெருங்கடலில் விழுந்தார். இவ்விருயாகிய துன்பப் பேரலைகளால் தாக்கப்பட்டார். பற்றுக்கோடு யாதொன்றுமின்றித் தவித்தார். பழச் சுவை போன்ற பவளவாய்மாதர் என்னும் புயல் காற்றால் அலைக்கப்பட்டார். மனக்குழப்பமுற்றார். ஆசை யென்கின்ற சுறாமீன் வாயிலே அகப்பட்டார். இனி உய்வதற்கு வழி எதுவும் இல்லை என எண்ணிக் கவலையுற்றார். “சிவாயநம” என்னும் திருவைந்தெழுத்தாகிய தெப்பத்தைப்பிடித் துக்கொண்டு கரைசேரவியலாது கிடந்தார். அவ்வேளையில் முதல்வனே வந்தார். தொடக்கமும் இறுதியும் இல்லாத முத்திக் கரையைக் காண்பித்து ஆட்கொண்டருளினார்


என மாணிக்கவாசகரே கூறுவதிலிருந்து இறைவன் தானே ஆட்கொண்டருளிய தன்மை தெளிவாகின்ற தன்றோ! இதனை, “தனியனேன் பெரும் பிறவி...” என்னும் மணிமொழியிற் கண்டு தெளிவுறுவோமாக.

இறைவனை அடைவதற்குரிய வழியாக வாதவூரர் காட்டுவது "அழுதால் உன்னைப் பெறலாமே" என்பதுதான். எவ்வெவற்றிற்கோ அழுகின்ற நாம் இறைவனை எய்த அழுகின்றோ மில்லையே!

திருவாதவூரர் இறைவனை வேண்டுவன: "கூத்தா உன்குரை கழற்கே கற்றாவின் மனம் போலக் கசிந்துருகவேண்டுவன" எனவும். "பாருரு வாய: பிறப்பற வேண்டும் பத்திமை யும் பெற வேண்டும்.வேண்டும் நின் கழற்கண் அன்பு பொய்மை தீர்ந்து மெய்ம்மையே. ..மாண்டு மாண்டு வந்து வந்து மன்ன நின் வணங்கவே,எனவும் வருவனவாற் றான் மாணிக்கவாசகர் இறைவனை வேண்டுதல் நனி விளங்கும். இத் துணைச் சிறப்பு வாய்ந்த ஞான நூலைப் போற்றாத அறிஞர் இலர். ஜி. யு. போப்பைத் தமிழ் மாணவன் எனத்தன் கல்லறையில் எழுதவைத்ததும் இத்திருவாசகமேயன்றோ?

"திருவாசகத்திற்கு உருகார் ஒருவாசகத்திற்கும் உருகார்"

## ஆத்ம சாந்தி பிரார்த்தனை



தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்க ஆயுட்கால அங்கத்தவரும், சிவகுரு ஆதீன முதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகளது தந்தையாருமாகிய சித்தாந்தரத்தினம், திருமுறைநெறிச்செல்வர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சைவசித்தாந்த முதுகலைமாணி சிவத்திரு.ந.சிவபாலகணேசன் அவர்கள் (13-07-2025) இறைபதமடைந்தார். அவரது ஆத்மா சாந்தி அடைய பிரார்த்தனை பிரார்த்திக்கிறோம்.

இந்தப் பத்திரிகை சிவபூமி அறக்கட்டளையால் வெளியிடப்பட்டுள்ளது.(ஆடி-2025) ISBN-978-955-7420-00-4